## கோட்ட வன அலுவலர், சமூகக் காடுகள் மற்றும் விரிவாக்கக் கோட்டம், தருமபுரி அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு. கா. இராஜாங்கம், M.Sc., M.Phil.,
கோட்ட வன அலுவலர்

செ.மு.ஆ.எண். 1484/ 2019 /ப , நாள் :15.11.2019

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் Group II(A) தேர்வு வனத்துறைக்கு 2017 – 18–ம் ஆண்டில் உதவியாளராக ஒதுக்கீடு – திரு.வே.மாதேஸ், உதவியாளர் பதவியில் கோட்ட வன அலுவலகம், சமூகக்காடுகள் மற்றும் விரிவாக்க கோட்ட அலுவலகத்தில் 12.12.2018 முற்பகல் பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :: 1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் எண். 6021/PSD-D/2015 நாள் : 01.11.2018.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்), சென்னை கடித எண்.W1/37899/2018 நாள் : 12.11.2018.
3. தலைமை வனப்பாதுகாவலர், தருமபுரி மண்டலம், தருமபுரி செ.மு.ஆ.எண். 8774/2018/பொ1, நாள் : 10.12.2018.
4. இவ்வலுவலக செ.மு.ஆ.எண்.3085/2018/ப, நாள்.12.12.2018.

~ * ~ * ~ * ~ * ~

பார்வை 1–ல் காணும் கடிதத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒருங்கிணைந்த குடிமைப்பணி Group – II(A) (நேர்முக தேர்வு அல்லாதது) 2017 – 18–ம் ஆண்டில் உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2–ல் காணம் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்), சென்னை அவர்களது ஆணையின்படி தருமபுரி மண்டலத்திற்கு ஒதுக்கீடு பெற்று, பார்வை 3–ல் கண்ட தலைமை வனப்பாதுகாவலர், தருமபுரி ஆணையின்படி இவ்வலுவலகத்திற்கு பணியமர்த்தி கொள்ள வழங்கப்பட்டதை தொடர்ந்து, பார்வை 4–ல் கண்ட இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி இவ்வலுவலகத்தில் 12.12.2018 முற்பகல் பணியில் திரு.வே.மாதேஸ், உதவியாளராக சேர்ந்தார்.

2) இவரது பணி தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 28–ன்படி இவர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்தும், மூன்றாண்டு கால தொடர் பணிக்குட்பட்டு, இரண்டாண்டு காலத்திற்கு கீழ்க்கண்டவாறு தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் | பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறைப்படுத்தப் பட்ட நாள் | தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்ட நாள். |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.வே.மாதேஸ் | உதவியாளர் | 12.12.2018 மு/ப | 12.12.2018 மு/ப | 12.12.2018 மு/ப |

..த.பி.பா..

2) மேற்படி பணியாளரின் பணியினை வரன்முறை செய்து வழங்கப்படும் ஆணையானது சென்னை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடுக்கப்பட்டு நிலுவையிலுள்ள வழக்கின்மீது வழங்கப்படும் ஆணைக்குட்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்./ கா. இராஜாங்கம்,
கோட்ட வன அலுவலர்,
சமூகக் காடுகள் மற்றும் விரிவாக்கக்
கோட்டம், தருமபுரி.

பெறுநர்

திரு.வே.மாதேஸ், உதவியாளர், கோட்ட வன அலுவலகம்,
சமூகக்காடுகள் மற்றும் விரிவாக்கக் கோட்டம், தருமபுரி – 5

நகல் : கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், தருமபுரி மண்டலம், தருமபுரி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

// உ.ந.உ.ப. //

கண்காணிப்பாளர்
15/11/19

15/11/19